# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

**முன்னிலை : திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்: 22/மா/2025**
**நாள்: 30 .01.2025**

திரு ஜி. சந்திரசேகர், .................. மனுதாரர்
சென்னை 17.

மண்டல அலுவலர்,
மண்டலம் 9,
பெருநகர சென்னை மாநகராட்சி. ................. எதிர் மனுதாரர்

சென்னை, தியாகராயநகர், சவுத் போக் தெரு, கதவு எண்.13/12–ல் வசிக்கும் திரு.ஜி. சந்திரசேகர் என்பவரின் 09/12/2024 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 09/12/2024 அன்று பெறப்பட்டு 22/மா/2025 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது:

**<u>ஆணை</u>**

சென்னை, தியாகராயநகர், சவுத் போக் தெரு, கதவு எண்.13/12–ல் வசிக்கும் திரு ஜி. சந்திரசேகர் என்பவர் 09/12/2024 நாளிட்டு அளித்த படிவம் 1–ல் இணைக்கப்பட்டுள்ள தனது 18.03.2019 மனுவில் கீழ்க்காணும் புகார்களை தெரிவித்துள்ளார்:

> தான் சமூக ஆர்வலர் என்றும், மேலும் இப்பகுதி மக்களுக்கான சமூக சேவையை சட்ட ரீதியாக செய்து வருவதாகவும், எண் 53/1, சி.பி ராமசாமி சாலை, ஆழ்வார்பேட்டை, சென்னை 18 என்ற முகவரியில் சுமார் **5 ஆண்டுகளுக்கு முன்** ஒரு தளத்தில் பழைய கட்டிடம் இருந்து பிறகு அதற்கு மேல் கூடுதலாக 3 தளம் கட்டப்பட்டது என்றும், இக்கட்டிடத்தை சுற்றி CMDA வரைபட அனுமதிபடி நான்கு புறமும் இடைவெளி விடவில்லையென்றும் பார்க்கிங் வசதியும் கிடையாது என்றும், இந்த வணிக வளாகம் பல ஆயிரம் சதுர கட்டிடத்தில் ‘‘தீனா கலர் லேப் எர்டல் பிரம்மாண்ட மொபைல் ஷாப்’’ மற்றும் பல்வேறு வணிக வளாக நிறுவனங்கள் செயல்பட்டு வருவதாகவும், இதில் 100க்கும் மேற்பட்ட ஊழியர்கள் வேலை செய்கிறார்கள் என்றும், தீ விபத்து மற்றும் பூகம்பம் போன்ற இயற்கை சீற்றம் எற்பட்டால் உயிர் தப்பிக்க நாலாபுறமும் ஒடுவதற்கு வழியில்லை என்றும், இவ்வணிக வளாக கட்டிடத்திற்கு வருவோர் தங்களது வாகனங்களை சாலைகளிலும், நடைபாதைகளிலும் நிறுத்துவதால் போக்குவரத்து இடையூறு எற்படுவதாகவும், எனவே, சென்னை மாநகராட்சியின் அனுமதிக்கு மாறாக கூடுதலாக கட்டிய தளங்களை இடித்து சீல் செய்யவும், பார்க்கிங் பகுதியில் கட்டிடம் கட்டப்பட்டுள்ளதை அகற்றி பார்க்கிங் வசதி செய்ய உத்திரவிடுமாறும், கட்டிட உரிமையாளர் திரு தினகரன் அவர்கள் இக்கட்டிடத்தை தானகவே முன்வந்து சீர்

செய்து அதிகாரிகளுக்கு ஒத்துழைப்பு அளிக்காதபட்சத்தில் நீதிமன்றத்தில் பொதுநல வழக்கு தொடர்ந்து அதற்கு உண்டான கட்டணத்தை மாநகராட்சி, CMDA மற்றும் கட்டிட உரிமையாளர்களிடம் வசூலிக்க நேரிடும் என்று தெரிவித்துள்ளார்."

2. முறையீட்டு மனுதாரரின் 09.12.2024 நாளிட்ட மனுவுடன் இணைத்து வரப்பெற்ற 18.03.2019 நாளிட்ட மனுவினை பரிசீலனை செய்ததில் மனுதாரர் பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் உட்பட பல அரசு அலுவலங்களுக்கு 18.03.2019 நாளிட்டு அளித்த மனுவில் சென்னை ஆழ்வார்பேட்டை, C.P.ராமசாமி சாலை, எண் 53/1 என்ற **முகவரியில் சுமார் 5 ஆண்டுகளுக்கு முன் ஒரு தளத்தில் பழைய கட்டிடம் இருந்தது எனவும், அதற்கு மேல் 3 தளம், மற்றும் பார்க்கிங் வசதி ஆகியவை CMDAவின் அனுமதிபடி கட்டப்படவில்லை என்று புகார் தெரிவித்துள்ளார்.**

3. இது போன்ற நிகழ்வுகளில் 2014 ஆண்டைய தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம் பிரிவு 10 (3) (c)ல் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது:-

10 (3) முறைமன்ற நடுவர்

(a) xxxx

(b) xxxx

(c) முறையீட்டில் கூறப்பட்டுள்ள நிகழ்வு நடைபெற்ற தேதியிலிருந்து ஐந்து ஆண்டுகள் முடிவடைந்த பின்பு தாக்கல் செய்யப்பட்டுள்ள முறையீடு எதனையும் தொடர்பான பொருட்பாடுகளில் விசாரணை செய்தல் கூடாது.

4. எனவே, மனுதாரர் தனது முறையீட்டு மனுவில் குறிப்பிட்டுள்ள புகார் மேற்கண்ட சட்டபிரிவின்படி இம்முறை மன்ற நடுவத்தால் நடவடிக்கை எடுக்க வேண்டிய அவசியம் எழவில்லை என இம்முறைமன்றம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

(ஒப்பம்)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்,

1) திரு ஜி. சந்திரசேகர்,
எண். 13/12 சவுத் போக் தெரு,
தியாகராயநகர், சென்னை 600 017.

2) மண்டல அலுவலர்,
மண்டலம் 9, பெருநகர சென்னை மாநகராட்சி,
எண். 4வது குறுக்கு தெரு, லேக்வியூ ஏரியா,
நுங்கம்பாக்கம், சென்னை 600 034.

நகல்:
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனி செயலர்,
இ.கோ. / உதிரி

//ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

சட்ட ஆலோசகர்/செயலாளர் (FAC).

4/2/25